S.C. No: 31/2022

பெயர் : சிலம்பரசன்

**அ.சா. 5**

03-09-2024

(எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 அருண்ராஜ் என் நண்பர். எதிரிகள் என் தெருவில் இருந்து 2 தெரு தள்ளியிருக்கிறார்கள். நான் அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் ஊர் முக்கியஸ்தர்களை வைத்து ஒரு பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டார்களா என்றால் ஆமாம். பரஞ்ஜோதியை வைத்து எழுதிக்கொண்டதாக சொன்னார்கள் என்று நான் சொல்லியிருக்கிறேன். இந்த விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. இந்த விவரத்தை என்னிடம் அருண் ராஜ் சொன்னாரா என்றால் சொன்னார். பத்திரம் எழுதி கொடுத்துவிட்டு இடத்தை கொடுக்கமாட்டேன் என்று ராஜேந்திரன் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விவரம் என்னிடம் அ.சா.1 சொன்னாரா என்றால் ஆமாம். நான் இறந்த நபரை முதல் நாள் பார்க்க போகவில்லை. அருண்ராஜ் போனதாக போனில் சொன்னார். அரசு தரப்பு குறுக்கு விசாரணையில் சொன்ன விவரங்கள் அனைத்தும் போலிசார் சொல்லிகொடுத்து சொன்னேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

S.C. No: 31/2022

பெயர் : மணிகண்டன்

**அ.சா. 4**

03-09-2024

(எதிரிகள் 1 முதல் 3 வரை ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு

**குறுக்கு விசாரணை**

பத்திரம் எழுதி வாங்கிய விவரத்தை அருண்ராஜ் தான் என்னிடம் சொன்னாரா என்றால் ஆமாம். அ.சா.1 தான் எனக்கு போன் செய்தாரா என்றால் நான் தான் அ .சா.1 க்கு போன் செய்தேன் . அன்று பிறந்தநாள் கொண்டாட்டம் என்னை தவிர நிறைய பேர் அங்கு இருந்தார்கள் என்றால் சரி. அரசு தரப்பு குறுக்கு விசாரணை விவரங்கள் அனைத்தும் பொய்யாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.1 என் நணபர். எதிரிகள் என் தெருக்காரர்கள்.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

S.C. No: 31/2022

பெயர் :மணிகண்டன் த/பெ ராஜேந்திரன்

**அ.சா. 3**

03-09-2024

(எதிரிகள் 1, முதல் 3 வரை ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு

**குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தார்கள் . கொலை நடந்தயிடத்தில் வைத்து விசாரித்தார்கள். சுமார் 9 மணியளவில் விசாரித்தார்கள் . மீண்டும் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் . 2 ஆம் தேதி 1 மணியளவில் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் . என்னுடன் என் அம்மா , சுரேஷ் குமார் , மாமா, ரமேஷ்குமார் ஆகியோர் இருந்தார்கள் . ஊர் மக்கள் வெளியே இருந்தார்கள் . என் அப்பாவிடம் கையெழுத்து வாங்கிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது . இந்த பத்திரம், நேட்டீஸ் எல்லாம் நான் காவல் நிலையத்தில் வைத்து தான் நான் முதன் முதலாக பார்த்தேனா என்றால் ஆமாம் . முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேன். என் அப்பா இறப்பதற்கு முதல் நாளும், இறந்த அன்றும் நான் ஊரில் தான் இருந்தேன் . நான் முதல் விசாரணை சாட்சியத்தில் 01/07/2021 அன்று வக்கீல் நோட்டீஸ் அனுப்பிய ராஜேந்திரன் நாளைக்கு உயிரோடு இருக்கிறானா பாரு நான் வெட்டுறேன் எவன் கேட்கிறானு பாரு என்று அங்காளம்மன் கோவிலுக்கு போகும் பாதையில் நின்று சொல்லிக் கொண்டிருந்ததை அங்கு ஊரில் இருப்பவர்கள் பார்த்துவிட்டு வந்து என்னிடம் சொன்னார்கள் என்ற விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை . அங்கே ஆடு மெய்த்துக்கொண்டிருந்தவர்கள் வந்து என்னிடம் சொன்னார்கள் . அவர்கள் என் ஊர்காரர்கள் தான் . அவர்கள் பெயர் தெரியாது. 2023 நான் பாலிடெக்கினிக் படிப்பை முடித்தேன். பெரம்பலூர் எம்ஆர்எப் டையர் கம்பெனியில் ஆகஸ்ட் 15, 2023 இல் வேலைக்கு சேர்ந்தேன் . என் அப்பா இறந்து கிடந்த இடம் அரசு புறம்போக்கு வெள்ளைகறை என்றால் சரி . என் அப்பா இறந்து கிடப்பதாக 6, 6.30 மணியளவில் சந்தானகிருஷ்ணன் வந்து சொன்னார் .

சொன்னவுடன் நான் என் பெரியப்பா ஆகியோர் போய் பார்த்தோம் . என் பெரியப்பா வீடு, என் வீட்டிற்கு எதிர்த்தாற் போல் இரண்டாவது வீடு . நான் போகும்போது போலிசார் அங்கு இல்லை . நான் சந்தான கிருஷ்ணன் , பெரியப்பா பழனிசாமி, அண்ணன் ரமேஷ் ஆகியோர் மட்டும் தான் இருந்தோம் . நான் போய் 3 மணி நேரம் கழித்து தான் போலிசார் அங்கு வந்தார்கள் . நான் போய் தகவல் சொல்லி 1/2 மணி நேரம் கழித்து என் அம்மா வந்தார்கள் . என் வீட்டில் இருந்து என் மாமா வீடு 2 கி.மீ தூரத்தில் உள்ளது. நான் தகவல் சொல்லி 1/2 மணி நேரத்தில் என் மாமா வந்தார் . போலிசாருக்கு ரமேஷ் அண்ணன் தகவல் கொடுத்தார் . என் அப்பா இறந்து கிடந்த இடத்திற்கு அருகே ஆனந்த்க்கு சொந்தமான காளவாயிம் , குடிசையும் உள்ளது என்றால் சரி. அந்தயிடத்திற்கு அருகில் ஆறுமுகம் செட்டியார் , அய்யாபிள்ளை ஆகியோர் காளவாய் உள்ளது என்றால் ஆறுமுகத்திற்கு உள்ளது . தமிழ்மணி, ராஜாங்கம் ஆகியோருக்கு காளவாய் அடுத்தடுத்து உள்ளது என்றால் தெரியாது . எம்ஆர்எப் டையரில் வேலை நேரம் சிப்ட் தான் . காலை 7 மணியில் இருந்து 3 மணி வரை ஒரு சிப்ட் . 3 மணியில் இருந்து 11 மணிவரை வேறு ஒரு சிப்ட் . என் அப்பா இறந்து கிடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் லைட் போஸ்ட் உள்ளது சற்று தள்ளி உள்ளது . நான் இறந்த என் தந்தை உடலுடன் மருத்துவமனைக்கு போகவில்லை. 12 மணியளவில் போனேன். என் தந்தை எவ்வாறு இறந்தார் என்று நான் மருத்துவரிடம் விவரம் சொல்லவில்லை . யார் சொன்னார்கள் என்று தெரியாது. என் அப்பா வக்கீல் நோட்டீஸ் அனுப்பிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. சந்திரகாசன் இறந்து 10 வருடம் இருக்கும். என் அப்பா காளவாயில் கல் அறுக்க யாரையும் வைத்துக்கொள்ள வில்லை. அவர் மட்டும் தான் அறுப்பார் . என் அப்பா இறந்து போன இடத்தில் இருந்து 100 மீட்டர் தொலைவில் அரசு மதுபான கடை உள்ளது என்றால் 200 மீட்டர் தொலைவில் உள்ளது . இறந்து போன என் அப்பாவை நான் தூக்கவில்லை . ஆம்புலன்ஸில் வந்தவர்கள் தூக்கினார்கள் . போலிசார் விசாரித்த போது பத்திரம் எழுதியது , நேரடியாக தெரியாது என்று சொன்னேனா என்றால் இல்லை . நான் திருச்சியில் என் மாமா வீட்டில் தங்கி பெரம்பலூர் வேலைக்கு போய் வருகிறேன் . நான் என் அப்பா இறந்துகிடந்ததை போய் பார்த்த பிறகு போலிசுக்கு தகவலோ , புகாரோ கொடுக்கவில்லை. இறந்து

கிடந்த இடத்தில் இருந்து காவல் நிலையம் 5 கி.மீ தூரம் இருக்கும் . போலிசார் விசாரித்த போது என் அப்பாவுடன் சந்தானகிருஷ்ணன் தங்கியிருந்தார் என்று சொன்னேனா என்றால் நான் போலிசாரிடம் பெயர் முகவரி இறந்தவர் எனக்கு என்ன உறவு என்று தான் சொல்லியிருந்தேன் . இறந்தவர் என் தந்தை என்பதால் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

S.C. No: 31/2022

பெயர் :ஜீவா

**அ.சா. 2**

03-09-2024

(எதிரிகள் 1, முதல் 3 வரை ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு

**குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை வீட்டில் வைத்து விசாரித்தார்கள் . மணி எனக்கு நினைவில்லை. காலையில் தான் விசாரித்தார்கள் . என் வீட்டுக்காரரிடம் பிரச்சனை செய்தது தொடர்பாக நானோ என் வீட்டுக்காரரோ காவல் நிலையத்திற்கு போய் புகார் கொடுக்கவில்லை. எதிரிகள் அடிக்கடி பிரச்சினை செய்து வந்தார்கள் என்ற விவரத்தை நான் முன் விசாரணையில் சொன்னது போல் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் . 3 மாதத்தில் இடத்தை தருகிறேன் என்று பத்திரத்தில் எழுதி கையெழுத்து போட்டுக்கொடுத்தார் என்றால் சரி . அந்த விவரத்தையும் நான் போலிசார் விசாரணையில் சொன்னேன் . 20 ரூபாய் பத்திரத்தை எதிரிகள் 3 மாதத்தில் இடம் தருகிறேன் என்று எழுதி வாங்கிக்கொண்டார்கள். பத்திரம் எழுதி கையெழுத்து வாங்கியபோது யார் யார் இருந்தார்கள் என்று தெரியாது . பத்திரம் கையெழுத்து செய்தது நேரடியாக தெரியாது. என் வீட்டுக்காரர் எந்த சொத்து சம்மந்தமாக யாரிடம் அக்ரிமெண்ட் போட்டார் என்ற விவரம் எனக்கு தெரியும் . நோட்டீஸ் கிடைத்தவுடன் சந்தோஷ் என் வீட்டுக்காரரை வெட்டிவிடுவேன், குத்திவிடுவேன் என்று மிரட்டினார் என்ற விவரத்தை நான் போலிசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் சொன்னேன். பழைய செட்டி தெரு சம்பவயிடத்தில் இருந்து 1 கிமீ தூரம் இருக்கும். என் கணவர் இறந்து போனதாக தகவல் கிடைத்த போது காலை 6.30 மணி இருக்கும். என் வீட்டில் பிறவசத்திற்காக என் மகள் வந்திருந்தாள் அவள் தான் அவர் கணவருக்கு தகவல் சொன்னார். என் மருமகன் வருவதற்கு முன்பே நாங்கள் என் கணவர் இறந்த இடத்திற்கு போய்விட்டோம் . நாங்கள் போன போது எத்தனை போலிசார் இருந்தார்கள் என்றால் எனக்கு அது தெரியவில்லை . ரத்தத்தை பார்த்தவுடன் எனக்கு ஒரு மாதிரி இருந்தது . நான் போகும் போதே அங்கு போலிசாரும் பொது மக்களும் இருந்தார்களா என்றால் இருந்தார்கள் . சந்திரகாசன் இறந்து 7 வருடங்கள் இருக்கும். சம்பவயிடம் வெள்ளை கறை புரம்போக்கு என்

கணவருக்கோ, எதிரிக்கோ சொந்தமான இடம் கிடையாது என்றால் சரி . கல் அறுப்பதற்கு விஏஓ விடம் அனுமதி பெற்றோமா என்றால் இல்லை. 5 வருடங்களாக கல் அறுக்கும் வேலையை என் கணவர் பார்த்தார் . 5 வருடமாக கல் அறுக்க என் கணவர் அனுமதி வாங்கவில்லை. சந்தானகிருஷ்ணன் என் கணவருக்கு நண்பர். நண்பர் அவர் எப்போதும் என் கணவருடன் தான் இருப்பார் . என் கணவர் இறந்த இடத்திற்கு அருகில் தான் ஆனந்த் காளவாய் உள்ளது . அங்கு அவருக்கு வீடு உள்ளது. மனைவி குழந்தைகளுடன் அவர் அங்கு தான் வசித்து வருகிறார் என்றால் ஆமாம். ஆனந்த் காளவாயில் இருந்து என் கணவர் இறந்து கிடந்த இடம் 10 மீட்டர் இருக்கும் என்றால் ஆமாம் . ஆனந்த் கல் அறுப்பதால் அங்கு தான் எந்நேரமும் வசித்து வருகிறார் என்றால் வீட்டிற்கும் போய் வருவார் . முருகையனுக்கும் ராஜேந்திரன் அண்ணன் சுந்தரேசன் என்பவருக்கும் வழக்கு கும்பகோணம் கோர்ட்டில் நடந்தது என்றால் சரி . அ.சா.ஆ.1 யார் எங்கே வைத்து டைப் செய்தார்கள் என்று தெரியாது. என் வீட்டுக்காரருக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளது. சம்பவத்தன்று அவர் மது அருந்தியிருந்தாரா என்றால் இல்லை . அன்றைய தினம் கொரோனா லாக் டௌன். சம்பவயிடத்திற்கு அருகில் மதுபான கடை உள்ளது என்றால் சரி. அய்யாவாடி முழுமைக்கும் அது ஒரு மதுபான கடை தான் என்றால் சரி. அது எங்கள் வாய்க்கால் வழியாக தான் மதுபான கடைக்கு போக வேண்டும் என்றால் வேறு வழி உள்ளது . இறந்து போன என் கணவரை நான் தூக்கவில்லை. என் பையனும் கொழுந்தனார் பையனும் ரமேஷ்ம் புறட்டி போட்டார்கள். அவர்கள் தூக்கும் போது அவர்கள் ஆடையிலும் ரத்தம் படிந்தது என்றால் இல்லை. காளவாய் வேலைக்கு என் வீட்டுக்காரர் வேறு யாரையும் வேலைக்கு வைத்துக்கொள்ள வில்லை. ஒரு ஆள் மட்டும் தனியாக கல் அறுக்க முடியாது என்றால் சரியல்ல . எனக்கு என் வீட்டுக்காரர் இறந்துவிட்டார் என்ற தகவலை கொழுந்தனார் பழனிசாமி போன் மூலமாக சொன்னதாக முதல் விசாரணையில் சொன்னதை அதை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் என்னை வீட்டில் வந்து விசாரிக்கும் போது தெருவில் உள்ளவர்கள் இருந்தார்கள் . முதல் நாள் நான் போய் என் கணவரை பார்க்கவில்லை. இறப்பதற்கு முதல் நாள் என் கணவர் வீட்டிற்கு மாலை 6 மணிக்கு வந்துவிட்டு போனார். எப்பொழுதுமே என் கணவர் 6 மணிக்கு வந்துவிட்டு 7 மணிக்கு போவார். இந்த வழக்கு சம்மந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை. என் மகன் மணிகண்டன் என் கணவர் இறந்த நேரத்தில் வலங்கைமான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தான். பெரம்பலூரில் வேலை பார்க்கும் போது அங்கு தங்கி

வாரத்திற்கு ஒரு முறை சனி ஞாயறில் வருவார் . என் கணவர் இறந்ததற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் கிடையாது என்றால் சரியல்ல . வீட்டில் வைத்து விசாரித்த பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை . நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல . எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல . இறந்து போனவர் என் கணவர் என்பதால் பொய்யாக சாட்சிமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

S.C. No: 31/2022

பெயர் :அருண்ராஜ்

**அ.சா.1**

03-09-2024

(எதிரிகள் 1, முதல் 3 வரை ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு

**குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை என் மாமனார் இறந்த இடத்தில் வைத்து விசாரித்தார்கள். போலிஸ் ஸ்டேசனில் வைத்தும் விசாரித்தார்கள். போலிஸ் ஸ்டேசனில் 02/07/2021 அன்று 12 மணியளவில் விசாரித்தார்கள். அவ்வாறு விசாரிக்கும் போது எங்கள் ஊர்காரர்கள் 13, 14 பேர்கள் இருந்தார்கள். அவர்கள் யார் யார் என்று சொல்ல முடியுமா என்றால் நவநீதகிருஷ்ணன், என் மச்சான் ரமேஷ். மணிகண்டன், சிலம்பரசன், திருசங்கு மகன் மணிகண்டன், துரை மகன் சந்தோஷ், ரமேஷ் மச்சான் நண்பர் கஜா, சுரேஷ்குமார், என் அண்ணன் சக்தி மற்றும் சிலர் இருந்தார்கள். கூட இருந்தவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் பெற்றார்கள். ஜீவாவை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் பெற்றார்கள். இவர்களையும் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் பெற்றார்கள். ஏற்கனவே முதல் விசாரணை சாட்சியத்தில் சொன்ன விவரங்களை தான் புகாரிலும், போலிசார் விசாரித்த போதும் சொன்னேனா என்றால் சொன்னேன். புகாரை நான் தான் எழுதினேன். திருநீலக்குடி காவல் நிலையம் போய் புகார் கொடுத்தேன். சந்தோஷ், குமார், செந்தில், ராஜேஷ், சுரேஷ்குமார் ஆகியோர் தான் என் மாமனாரை முன் விரோதம் காரணமாக கொலை செய்திருக்கிறார்கள் என்று நான் புகார் கொடுத்தேன் என்று முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியிருக்கிறேன். என் மாமனாரை இறந்த தகவல் எனக்கு காலை 6.15 க்கு தெரியும். என்னிடம் இந்த தகவலை என் மனைவி தான் போன் பண்ணி சொன்னார். என் மனைவி தான் போன் மூலம் இந்த தகவல் சொன்னார் என்ற விவரத்தை நான் புகாரிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லி இருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். என் மாமனார் என்ன படித்திருக்கிறார் என்று தெரியாது. நான் சம்பவயிடத்திற்கு போவதற்கு முன்பே போலிசார் மற்றும் பொதுமக்கள் இருந்தார்களா என்றால் ஒரே ஒரு போலிஸ் இருந்தார், பொது மக்களும் இருந்தார்கள். சசிக்குமார், மணிகண்டன், பக்கத்து

காளவாயில் உள்ளவர்களும் இருந்தார்கள் . சம்பவ இடத்திற்கு கிழக்கு பக்கம் ஆறுமுகம் காளவாய் உள்ளது . அந்த காளவாயில் சம்பவயிடத்திற்கு 10 மீட்டர் தூரத்திலேயே ஆறுமுகம் வீடு உள்ளது என்றால் 200 மீட்டர் தள்ளி உள்ளது. இறந்து போனதாக சொல்லப்படும் இடத்திற்கு மேற்கே குருநாதன் காளவாய் உள்ளது என்றால் இல்லை. இறந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் காளவாய் , கொள்ளை, கூரை வீடு உள்ளது என்றால் அது குடிசை அதில் யாரும் இருக்க மாட்டார்கள். பொதுவாக காளவாய் போட்டால் அங்கு குடிசை போட்டு ஆட்கள் தங்குவார்கள் என்றால் அன்றைய தினம் இல்லை . அன்றைய தினம் யாரும் இல்லை என்பதை நான் விசாரித்து தெரிந்துக்கொண்டேன் . எங்கள் இடத்திற்கு பக்கத்திலேயே அய்யாபிள்ளை, ராஜாங்கம், தமிழ்மணி, ராஜாங்கம் மகன் ஆகியோர் தொடர்ந்து காளவாய் போட்டிருக்கிறார்கள் என்றால் சரி . இவர்கள் எல்லோரையும் விசாரித்தாள் அன்றைய தினம் என்ன நடந்தது என்று தெரியும் என்றால் அன்றைய தினம் யாரும் அங்கு இல்லை. புகாரை திருநீலக்குடி காவல் நிலையத்தில் வைத்து தான் எழுதினேன். அருகில் உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் இருந்தார்கள். சம்பவயிடத்திற்கு அருகில் மின் கம்பம் உள்ளது என்றால் இல்லை . நான் அரசு மருத்துவமனைக்கு என்னுடைய இருசக்கர வாகனத்தில் போனேன். இறந்தவரை நான் போய் தூக்கவில்லை. என் மாமியாரோ, அவருடைய மகனோ தூக்கினார்களா என்றால் யாரும் தொடக்கூடாது என்பதால் நாங்கள் யாரும் தொடவில்லை . அ.சா.ஆ.1 உடன்படிக்கை பத்திரம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்று தெரியாது . கையெழுத்து வாங்கிக்கொண்டார்கள் என்று என் மாமனார் சொல்லி தெரியும். இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் என் மாமனார் புகார் கொடுத்தாரா என்றால் நண்பர் வழக்கறிஞர் சீனிவாசன் என்பவரிடம் ஆலோசனை கேட்டதில் , அவர் நோட்டீஸ் அனுப்பலாம் என்று சொன்னார் . காளவாய் நடத்துவதற்கு கிராம நிர்வாக அலுவலரிடம் அனுமதி பெற வேண்டும் என்றால் சரி . என் மாமனார் அனுமதி பெற்றாரா என்று எனக்கு தெரியாது . என்னை ஆய்வாளர் விசாரிக்கும் போது அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2 யை கொடுத்தேன். அதை பற்றிய விவரங்களை நான் போலிசார் விசாரித்த போது சொன்னேனா என்றால் சொன்னேன் . அ.சா.ஆ.1 ஆவணத்தில் என் மாமனார் கையெழுத்து தமிழில் உள்ளது என்றால் ஆமாம் . அ.சா.ஆ.2 ஆவணத்தில் என் மாமனார் ஆங்கிலத்தில் கையெபத்து போட்டுள்ளார் என்றால் ஆமாம். இந்த இரண்டில் எது உண்மையான கையெழுத்து என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரி. ஜூன் மாதத்தில் 30 தேதிகள் தான் உள்ளது என்றாலும் அ.சா.ஆ.2 ஆவணத்தில் 31/06 என்று போடப்பட்டுள்ளது

என்றால் அதை டைப் செய்த எதிரிகளிடம் தான் கேட்க வேண்டும். இதை எதிரிகள் டைப் செய்தார்களா, என் மாமனார் டைப் செய்தார்களா என்று விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் எதிரிகள் தான் டைப் செய்து கொண்டுவந்ததாக என் மாமனார் சொன்னார். நான் இதை பற்றி வேறு யாரையும் விசாரித்து தெரிந்துக்கொள்ளவில்லை. அ.சா.ஆ.1 ஆவணத்தில் 2 ஆம் பக்கம் சாட்சி கையெழுத்து போட்டவர்கள் கிழிக்கப்பட்டுள்ளது என்றால் சரி. இதில் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்றால் நவநீதகிருஷ்ணனும், ஜோதி என்பவரும் சாட்சி கையெழுத்து போட்டார்கள். அவர்கள் இருவரும் சாட்சி கையெழுத்து போட்டார்கள் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. 11/03/2021 ஆவணம் பத்திரம் என் மாமனார் பெயரில் தான் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரி. சொத்து விவரத்தில், புல எண் 255 என்று மட்டும் தான் உள்ளது. உட்பிரிவோ, விஸ்தீர்ணமோ இல்லை என்றால் சரி. இந்த 100 குழி அரசு புரம்போக்கு நிலம் என்றாலும், எதிரிகளுக்கோ, என் மாமனாருக்கோ சொந்தம் கிடையாது என்றால் சரி. அரசு புரம்போக்கு நிலத்தில் காளவாய் நடத்துவது சட்டப்படி தவறு என்றால் சரி. ஆனால் என் மாமனார் பட்டா இடத்தில் தான் காளவாய் நடத்தினார். அந்த பட்டா புல எண் தெரியாது. பிரச்சினைக்குரிய இடமானது அரசு புரம்போக்கு வெள்ளை கறை என்றால் சரி. என் மாமனார் இறந்த இடத்திற்கு அருகில் அரசுக்கு சொந்தமான மதுபான கடை உள்ளது என்றால் கட்டிடம் மட்டும் உள்ளது. அது அப்போது செயல்பாட்டில் இல்லை. தற்பொழுதுவரை அந்த மதுபான கடை இயங்கிவருகிறது என்றால் சரியல்ல. அந்த மதுபான கடைக்கு போகவேண்டும் என்றால் பிராதான வாய்க்கால் வழியாக தான் போகவேண்டும் என்றால் சரி. மருத்துவரிடம் நான் விவரம் சொல்லவில்லை. ஏற்கனவே என் மாமனார் சந்தன மரம் அறுத்ததாக அவர் மீது வனத்துறை வழக்கு பதிவு செய்துள்ளது என்றால் சரியல்ல. அந்த வழக்கில் என் மாமனார் கும்பகோணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஆஜரானார் என்றால் தெரியாது. சம்பவயிடத்தை ஒட்டியே ஆனந்துக்கு சொந்தமான காயவாயிம் கொட்டகையும் உள்ளது என்றால் சரி. ஆனந்த் அங்கு தான் தங்கியிருப்பார் என்றால் இரவு நேரங்களில் தங்கமாட்டார். சந்திரகாஷ் எந்த ஆண்டு இறந்தார் என்றால் 2018 இல் இறந்தார். சம்பவயிடத்தில் இருந்து பழைய செட்டி தெரு 1.1/4 கி.மீ இருக்கும். சம்பவயிடத்தில் இருந்து நான் இருக்கும் சின்ன தேவனார் விளாகம் 3 கி.மீ தூரம் இருக்கும். என் மனைவி போனில் என் போனிற்கு தகவல் வந்தது. இருவரது போன் நம்பரும் எனக்கு தெரியும். முதல் நாள் இரவு 7.30 மணிக்கு நான் அங்காளம்மன் கோவிலுக்கு

போனேன். அதன் பிறகு நான்என் மாமனார் இருக்கும் இடத்திற்கு போகும் போது 8 மணி இருக்கும். நான் மாமனாரிடம் ஒரு 5 நிமிடம் பேசிக்கொண்டிருந்தேன். அப்பொழுது என் மாமனார் மட்டும் தான் சாப்பாடு சமைத்துக்கொண்டிருந்தார் . வேறு யாரும் அங்கு இல்லை. ஆச்சி என்கின்ற சந்தானகிருஷ்ணன் காய் வாங்க போயிருந்தார். புகாருக்கான விவரங்களை நண்பர்களும், உறவினர்களும் சொன்னார்கள். அ.சா.ஆ.1, அ.சா.ஆ 2 ஆவணம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் காவல் துறையினரிடம் ஒப்படைக்க வில்லை என்றால் சரியல்ல . இறந்த போனவர் என் மாமனார் என்பதாலும் அ .சா.2, அ.சா.3 என் உறவினர்கள் என்பதால் நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் நாள் நான் போய் பார்க்கும் போது என் மாமனார் மது அருந்திக்கொண்டிருந்தாரா என்றால் இல்லை. அ.சா.ஆ.1, அ.சா.ஆ 2 வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்றாலும் அதில் உள்ள கையெழுத்துக்கள் என் மாமனாருடையது அல்ல என்றால் சரியல்ல . கொலை செய்யப்படுவதற்கு 6 மாதத்திற்கு முன்பிருந்து அந்தயிடத்தில் காளவாய் போட எதிரிகள் அந்தயிடத்தை கேட்டு தொல்லை பண்ணிவந்தார்கள் என்ற விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொன்னேன். முதல் நாள் இரவு நான் என் மாமனாரை பார்த்த போது , மறுநாள் காலை காவல் நிலையம் போய் புகார் கொடுக்கலாம் என்று அவர் சொன்னதாக சொன்ன விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொன்னேன். மறுநாள் காலை 02/07/2021 காலை 6.15 மணிக்கு என் போனுக்கு என் மனைவி பிரியங்கா கூப்பிட்டு நாற்றாற்ங்கரையில் என்ன அப்பா வெட்டுப்பட்டு கிடப்பதாக சொன்ன விவரத்தை நான் போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன் . திருநீலக்குடி காவல் நிலையத்திற்கு ஊர்காரர்கள் மூலம் தகவல் சொன்னேன் என்று போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. வழக்கிற்கு முன்பு எதிரிகளின் கையெழுத்து தெரியாது. அ.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து எதிரிகளின் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல . எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,

Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)

Additional District Judge,

Fast Track Court, Kumbakonam.